## சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி
## அசல் வழக்கு எண்.28/2024

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் செவ்வாய் கிழமை பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | இராஜேந்திரன் | த/பெ.: | மகாராஜன் |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | மளிகைகடை |
| வயது: | 58 | முகவரி: | திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.02.2026.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பு ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 03.04.2019–ல் பூர்த்தி செய்ய படாத ரூ.50–க்கான பத்திரம் 1, 2 பிரதிவாதிகள் கையொப்பம் இடப்பட்டது நகல் தாக்கல் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது மற்றும் எனது மனைவி கஸ்தூரி கையெழுத்து என்றால் சரிதான். தேதி குறிப்பீடாத இந்தியன் வங்கி காசோலை எண்.474741 நான் வாதியிடம் கொடுத்தேன் அதற்கான நகலை தாக்கல் செய்கிறேன். வாதி துரைமுருகன் எனக்கு பணம் வாங்கியது குறித்து கைப்பட ஒரு கடிதம் எழுதி

கொடுத்துள்ளார் அந்த கடிதம் ஏற்கனவே பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.04.2023–ல் நான், வாதி மற்றும் சந்திரா மீது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீது அசல் **பி.வா.சா.2** ஆகும். (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) **பி.வா.சா.3** ஆகும். 10.04.2019–ல் எனது மகள் இராதிகா என்பவரின் திருமண பத்திரிக்கை அசல் **பி.வா.சா.4** ஆகும். வாதி தாக்கல் செய்த அசல் வழக்கை அதிக செலவு தொகையுடன் தள்ளுப்படி செய்யவேண்டுமென பிராத்திக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது:–**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.